4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 170/2020 நாள்: 28.01.2026 வா.சா.2 – அருண்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை, நான் B.Tech படித்துள்ளேன். நான் என்னுடைய ஆதார் அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் மரிக்கந்ததை வல்லக்குண்டாபுரத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.1984 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 6 ஏக்கராகும். தாவா சொத்தின் அருகே எனக்கு எதுவும் பூமிகள் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தின் ஆவணங்களை நான் எப்போது படித்து பார்த்தேன் என்றால் சுமார் 3 முதல் 4 ஆண்டுகளுக்கு முன்பு படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்துக்கள் ஆதியில் ராமானுஜம் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி நபருக்கு முன்பு அவருடைய தந்தைக்கு பாத்தியப்பட்டிருந்தது. என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாணத்தில் குறிப்பிட்டுள்ள பாகபிரிவினை ஆவணத்தில் நான் தரப்பினராகவோ, சாட்சியாகவோ இல்லை என்றால் சரிதான். நான் சட்டம் சார்ந்த படிப்பு எதுவும் படிக்கவில்லை. நான் ஆவண எழுத்தர் மற்றும் பத்திர பதிவு சம்பந்தமான வேலை எதுவும் செய்யவில்லை. ஒரு ஆவணம்

உண்மையான ஆவணமா அல்லது போலியா என்று என்னால் கருத்துரை சொல்ல இயலுமா என்றால் சொல்லமுடியாது என்று சாட்சி கூறுகிறார். 1984 பாகபிரிவினை ஆவணத்தில் எத்தனை பட்டிகை சொத்துக்கள் உள்ளது என்றால் 2 பட்டிகை சொத்துக்களாக எழுதியிருக்க வாய்ப்புள்ளதாக சாட்சி கூறுகிறார். எத்தனை பட்டிகை சொத்துக்கள் மற்றும் யாருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சாட்சி தெரியாது என்று கூறுகிறார். பாகபிரிவினை ஆவணத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் தெரிவித்துள்ள ராமனுஜம் எழுதியுள்ள உயில் பற்றி எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் வாதி சொல்லி தெரியும், வாதிக்கு அவர் தந்தையார் இறந்த போது தெரியும் என்று சாட்சி கூறுகிறார். இவ்வழக்கில் வாதி என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சாட்சி தெரியும் என்று கூறுகிறார். வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். காவல் நிலையத்தில் நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி சுகர் மில்லில் AGM ஆக சுமார் 30 முதல் 35 ஆண்டுகள் பணியாற்றி வருகிறார். வாதி சுகர் மில் AGM என்பதால் இந்தியா முழுவதும் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். வாதி வெளி மாநிலங்களில் அதிகமாக வசித்து வந்தார் என்றால் சாட்சி தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் வசித்து வந்தார்.

ராமனுஜத்தின் மனைவி அவர் இறப்பதற்கு முன்பாகவே இறந்து விட்டார். ராமனுஜம் மற்றும் அவரது மனைவி உயிருடன் இருந்த போது தாவா சொத்தை அவர்கள் தான் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி பானுமதியை எனக்கு தெரியும், அவர் எனது உறவினர் தான். பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 25 முதல் 30 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். தாவா சொத்தில் பிரதிவாதி தென்னை மரங்கள் நட்டு அவரது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதி தண்ணீர் தொட்டி அமைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி தென்னை மரங்களின் வயது என்ன இருக்கும் என்றால் ராமனுஜம் இறந்து ஒரு வருடத்திற்கு பிறகு பிரதிவாதி மேற்படி தென்னை மரங்களை வைத்து பராமரித்து வருகிறார். பிரதிவாதி அனுபவிக்கும் சொத்தை தவிர மற்றொரு பகுதி சொத்துக்கள் தரிசாக உள்ளது என்றால் தென்னை மரங்கள் எதுவும் இல்லை என்று சாட்சி கூறுகிறார். வாதியும் பிரதிவாதியும் தனி தனி சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ராமானுஜம் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசல் மற்றும் நகல் ஆவணங்களை நான் நேரடியாக பார்த்தது இல்லை. மேற்படி உயில் ஆவணத்தை பற்றி என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். எனக்கு உயில் ஆவணம் பற்றி தெரியாத காரணத்தினால் அது மோசடியானது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் வேண்டும் என்றே பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ராமனுஜத்திற்கு விபத்து நடந்தது சம்பந்தமாகவும், அவர் மனநிலை சரியில்லாமல் இருந்ததாகவும் நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் பொய் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தின் 6வது பத்தியில் சொல்லியுள்ள விவரம் பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தம்பாக ராமனுஜத்திற்கும் அவரது சகோதரருக்கும் பாகபிரிவினை ஏற்பட்டதால் ராமனுஜத்திற்கு பிரிந்த சொத்து அவர் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1984 ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரம் பற்றி வாதி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில், நான் அது சம்பந்தமாக நான் கூடுதல் சாட்சியம் அது சம்பந்தமாக அளிக்க முடியாது என்றால் சரியல்ல. 1984 மற்றும் ராமனுஜம் எழுதி வைத்த உயில் குறித்து வாதி எவ்வித பரிகாரமும் கோராத நிலையில் அது குறித்து நான் எவ்வித சாட்சியமும் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.28 15:29:11 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.